ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்யதர்மம்.

वपुः कुब्जीभूतं गतिरपि तथा यष्टिशरणा
विशीर्णा दन्तालिः श्रवणविकलं श्रोत्रयुगळम् ।
शिरः शुक्लं चक्षुस्तिमिरपटलैरावृतमहो
मनो मे निर्लज्जं तदपि विषयेभ्यः स्पृहयति ॥

அதிக வயதாய்விட்டபடியால் சரீரம் குறுகிவிட்டது. ஒரு அடி நடக்கவேண்டுமானாலும் ஊன்றுகோலில்லாமல் முடியாது. பற்கள் யாவும் ஜீர்ணமாகப் போய்விட்டன. செவி இரண்டும் கேட்கும் சக்தியை இழந்துவிட்டது. தலையிலுள்ள கேசம் பூராவும் நரையால் வெளுத்திருக்கின்றது. நேத்திரங்களும் திமிரமென்னும் ரோகத்தால் மிகவும் பீடிக்கப்பட்டுப் பார்க்கும் சக்தியற்றவையாயின. இவ்விதம் சகல இந்திரியங்களுக்கும் சக்தி குன்றிவிட்டாலும், என் மனம் மாத்திரம் அடங்காமல் லஜ்ஜையைவிட்டு வெளியிலுள்ள விஷயங்களை இச்சிக்கின்றது. கஷ்டம்.

மனிதர்களுக்கு ஸம்ஸாரபந்தத்தில் கட்டுப்பட்டு சிரமத்தையடைவதற்கும், அதிலிருந்தும் விடுபட்டு மோக்ஷமென்னும் புருஷார்த்தத்தை யடைவதற்கும் மனமே முக்கிய காரணம். இவ்விதமே,

मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः ।

என்று ஓர் மஹானும் கருதியிருக்கிறார். இதர இந்திரியங்கள் பூராவும் நமக்கு ஸ்வாதீனமாய்க் கட்டுப்பட்டு வந்தாலும், இதை ஸ்வாதீனப்படுத்துவது மிகவும் சிரமம். இது ஸ்வாதீனமாகாவிடில் உபயோகமில்லை. ஆகையால், எவ்வளவு சிரமம் நேர்ந்தாலும் அவரவர்களும் துஷ்டக் காளைகளைப்போல கண்ட விடங்களில் பலாத்காரமாயிழுக்கும் மனதைப் பின்பற்றாமல், தமக்கு வசமாக்கிக் கொண்டு இக் கொடிய ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் விடுபட்டு ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை யடைந்து சுகித்திருக்க முயலவேண்டியது முக்கியம்.

சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்

வேதாந்தஸாரம்.

(84-வது பக்கத்தொடர்ச்சி)

இரண்டாவது வைராக்கியம்.

இவ்வுலகிலும் பரலோகத்திலு மேற்படும் தன் கர்மபலரூபமான ஸுகானுபவத்தில் வெறுப்பு உண்டாகவேண்டும். இவ்வுலக ஸுகானுபவமானது, சிறந்த புஷ்பம், சந்தனம், ஸ்திரீ, நல்ல போஜனம், திவ்யகானத்தைக் கேட்பது, விசேஷ தனம், புத்திரன், மித்திரன், பூமி முதலானவைகளாலடையப்படுகின்றதாகும். இவை யாவும் முற்பிறவியிற் செய்யப்பட்ட அவரவர்களுடைய கர்மாக்களால் உண்டுபண்ணப்படுகிறபடியால் கர்மாக்களின் காரியமாகின்றன. காரியங்கள் யாவும் அநித்தியமென்று முன்னமேயே கூறப்பட்டிருக்கிறபடியால் இவைகள் யாவும் அநித்யஸுகமென்று அதாவது, ஸுகாபாஸம், அவிவேகத்தால் ஸுகம்போலத் தோன்றுகின்றனவேயன்றி உண்மையான அறிவாளிகளுக்கு இவைகளில் விருப்பமுண்டாகமாட்டா. நாமும் வேகத்தைவிட்டுப் பொறுமையுடன் சற்று கவனிப்போமாகில் உண்மையென்றே நன்கறியலாம். இங்கு கூறப்பட்ட உலகிலுள்ள விஷயஸுகங்களையனுபவிப்பதற்கு முக்கிய ஸாதனமாயும், ஒரு ஜன்மா துவக்கத்தில் கர்மாக்களாலளிக்கப்படும் பலங்களுக்குள் முதன்மையாயுமிருப்பது இந்த சரீரம். மானிடர்களில் இதையடையாதவர்களில்லை. இதைப்பற்றி இது எத்தன்மையிலுள்ளதென்பதை முந்தி விசாரிக்க வேண்டியது முக்கியம். ஒரு சரீரத்திற்கு சாஸ்திரங்களில் பல அவஸ்தைகள் கூறப்பட்டிருந்தாலும் கர்ப்பாவஸ்தை, பால்யாவஸ்தை, யௌவனாவஸ்தை, முதுமையவஸ்தை என்று நான்கு அவஸ்தைகள் ஏற்படு

மென்று பொதுவாய் வைத்துக்கொள்வோம். இவைகளில் முந்தியதான கர்ப்பாவஸ்தையில் இந்த சரீரத்திற்கேற்படும் கஷ்டமாவது:-

कुक्षौ स्वमातुर्मलमूत्रमध्ये स्थितिं तदा विट्कृमिदंशनं च ।
तदीयकौक्षेयकवह्निदाहं विचार्य को वा विरतिं न याति ॥

தன் அன்னையின் குக்ஷியில் மலமூத்திரங்களுக்குஇடையில் இருப்பையும், அங்குள்ள மலக்கிருமிகளால் கடிபடுவதையும், மாதாவின் உதிரத்திலுள்ள வன்ஹியால் தஹிக்கப்படுவதையும் ஆலோசித்தால், எவன்தான் இனி இந்தமாதிரி அவஸ்தையை அனுபவிக்கும் இச் சரீரம் நமக்கு வேண்டாமென்று வைராக்கியத்தையடையமாட்டான்! யாருமடைவார்கள் என்று கருத்து. இந்த சரீரத்துற்பத்திக்கு ஆரம்பசமயத்தில் இவ்வித கஷ்டங்கள் நேருகின்றபடியால் அக்காலத்தில் ஸுகமில்லை.

இனி அதைவிட்டு வெளிவந்த பால்யாவஸ்தையில் நேரும் கஷ்டமாவது:—

स्वकीयविण्मूत्रविसर्जनं तच्चोत्तानगत्या शयनं तदा यत् ।
बालग्रहाद्याहतिभाक्च शैशवं विचार्य को वा विरतिं न याति ॥

நிமிர்ந்தபடியே சயனமும், சயனித்தபடியே சரீர மலங்களைக் கழித்து அவைகளின்மேல் சிலசமயம் ஏற்படும் படுக்கையையும், பாலக்கிரகமென்று சொல்லப்பட்ட சில துஷ்டக்கிரகங்களாலுண்டு பண்ணப்பட்ட பீடையையும், தனக்குவேண்டிய ஆகாரத்தையோ அல்லது பசியுள்ள காலத்தையோ, சரீரங்களிலேற்படும் கஷ்டங்களையோ பிறருக்கறிவிக்கமுடியாமல் படும் கஷ்டத்தையும் ஆலோசித்துப்பார்த்தால், எவன்தான் இனி இந்தக் கஷ்டங்களையனுபவிக்கும் சைசவாவஸ்தைக்குக் காரணமான இச் சரீரம் வேண்டாமென்று ஒழிவையடையமாட்டான்!

இதற்குமேல் யௌவனத்திற்கு முந்தி கௌமாராவஸ்தையென்று ஒரு பிரிவுண்டு. அதாவது மைனராயிருக்கும் சமயம்.

அந்த அவஸ்தையில் படும் கஷ்டம் ஸ்பஷ்டமாகையால் அதை விட்டு மேலான யௌவனாவஸ்தையையும் கொஞ்சம் கவனிப் போம். யௌவன பருவத்தில்

मदोद्धतिं मान्यतिरस्कृतिं च कामातुरत्वं समयातिलंघनम् ।
तां तां युवत्योदितदुष्टचेष्टां विचार्य को वा विरतिं न याति ॥

மதத்தாலேற்பட்ட கர்வத்தையும், பெரியோர்களைச் செய்யும் அவமானத்தையும், எப்பொழுதும் விஷயசுகத்தில் விருப்பமாயிருக்கும் தன்மையையும், தன் வர்ணாச்ரமங்களுக்குற்ற தர்மானுஷ்டானங்களிற் பற்றுதலில்லாமல் பல சமயங்களில் மாறுவதையும், யௌவனப்பருவமடைந்தால் ஸ்திரீகளால் கூறப்பட்ட இவ்விதமென்று சொல்லவியலாத கெட்ட நடத்தைகளையும் விசாரித்துக் கவனித்தால் ஒருவனும்மறுபடியுமிவ்வித யௌவனசரீரத்தைவிரும்பமாட்டான். இதற்கு அடுத்தபருவம் முதிர்ந்தவயதுள்ளகாலம்.

विरूपतां सर्वजनादवज्ञां सर्वत्र दैन्यं निजबुद्धिहैन्यम् ।
वृद्धत्वसम्भावितदुर्दशां तां विचार्य को वा विरतिं न याति ॥

வயது முதிர்ந்தகாலத்தில் சரீரத்திற்குத் தளர்ச்சியேற்பட்டு அதனால் பார்ப்போர்களுக்கு விகாரமான ரூபத்தையும், பல ஜனங்களாலும் செய்யப்படும் அவமானத்தையும். எந்த சமயத்திலுமிருக்கும் தீனபாவத்தையும், தன் புத்திக்கேற்படும் குறைவையும், பின்னும் வார்த்தகாவஸ்தையிலுண்டாகும் சகிக்கவியலாத கொடிய பல கஷ்டங்களையும் நன்கறிந்தவன் இவ்வித சரீரம் இனி நமக்கு ஒரு சமயமும் வேண்டாமென்று வெறுப்படையாமலிருப்பானா? எவ்வித சுகங்களையுமனுபவிக்க முதல் ஸாதனமாய் விளங்கும் இச் சரீரத்தின் ஸ்திதியே இவ்விதமிருக்கும்பொழுது இதனாலனுபவிக்கப்படும் விஷயங்களைப்பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை. ஆகையால் இந்த சரீரத்தாலும், இதனாலனுபவிக்கப்படும் விஷயசுகங்களாலும் கஷ்டத்தைத் தவிர சுகமேயில்லையென்று அவைகளில் ஏற்படும் வைராக்கியம் இரண்டாவது சாதனமாகும்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

அகில இந்திய ஹிந்து மஹாஸபை
'வைதிகப்ரதிநிதி தேவை'

(96-வது பக்கத்தொடர்ச்சி)

இப் பரதகண்டத்தின் லெளகிக தர்மத்தை புனர்ஸ்தாபனம் செய்ய மஹாத்மா காந்திஜி ஏற்பட்டிருப்பதுபோல், வைதிக தர்மத்தை ஸம்ஸ்தாபனம் செய்யத் தர்மாத்மா. மாளவையாஜி ஏற்பட்டிருக்கிறார் என்று இருந்த நம்பிக்கை போய்விட்டதாகவும், வேதமதம் நாதனில்லாமல் அநாதையாய்ப் போய்விட்டதாகவும் எண்ணிச் சோர்ந்துநிற்கிறார்கள வைதிகர்கள். धृतिरापदि ஆபத்தில் தைர்யம். ஹே! வைதிகப்ரமுகர்களே!! நீங்கள் தர்மங்களை ஆதரிப்பது உண்மையானல் 'धृति:' தீரம் என்பது தர்மங்களுள் (கடமை) ஒன்று என்பதை நீஙகள் நமபுவது ஸரியானல், இநதசமயம் 'ஆபத்காலம்' என்று நம்புவது உறுதியானல் இந்த ஸமயம் நீங்கள் செய்யவேண்டியது ஒன்று உண்டு.

அதோ, வடதேசத்தில் கல்கத்தாநகரில் 'அகில இந்திய ஹிந்து மஹா ஸபை' கூடப்போகிறது. லாலா லஜபதிராய் அக்ராஸனம் வகிக்கப்போகிறார். இந்த ஸமயம் விட்டுக்கொடுக்க வேண்டாம். நீங்கள் ஒன்றுசேர்ந்து சாஸ்திரங்களிலுள்ள ஆதாரங்களைத் தேடிக்குவியுங்கள். ஸம்ஸ்கருதத்திலும், ஹிந்தியிலும், இங்கிலீஷிலும் பேசத்தெரிந்த பண்டிதர்கள் பலரைப் ப்ரதிநிதியாக அனுப்புங்கள். ஆரவாரம் செய்யுங்கள். தற்காலம் வட இந்தியாவில் சுற்றுப் பிரயாணமாக சிஷ்ய யாத்திரை செய்துவரும் பிரதிவாதி பயங்கரம், அநந்தாச்சார்யார் ஸ்வாமி ஹிந்தியில் நன்ருய்ப் பேசக்கூடியவர். மூன்று பாஷைகளிலும் பண்டிதர் பலர் உளர்.

தைரியத்தை இழக்கவேண்டாம். இதே பரதகண்டத்தில் பௌத்த ஜைனமதம பரவிநின்றகாலததில் ஸ்ரீ சங்கராசார்யார்

பட்டபாட்டை மனத்தில் நிறுத்துங்கள் இதே கல்கத்தா நகரத்தில் ஆரியஸமாஜம் பரவிநிற்கையில் திருவிசைநல்லூர் ஸ்ரீ ராமஸுப்பாசாஸ்திரிகள் அவர்கள் அங்கு சென்று பெரும் வைதிகஸபையில் 'தயானந்த கண்டரகோடனம்' என்றோர் கிரந்தம் எழுதிப்படித்து அம் மதத்தைக் கண்டித்தார்.

கல்கத்தா ஹிந்துஸபையில் செய்யவேண்டிய கார்யங்கள் 2 உண்டு. (1) தீண்டாமை, புனப்ரவேசம் இவைகளைப் பற்றி வாதமசெய்து ஒரு முடிவான தீர்மானத்தை ஏற்படுத்தல். (2) 'ஹிநது தேவாலய ஸொத்து பரிபாலனச் சட்டம்' இது இப்பொழுது சட்டமாகிவிட்டது. சென்னையில் கண்டனக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ ஸத்யமூர்த்தி சென்னைச் சட்டஸபையில் இச்சட்டத்தை எடுத்துவிடும்படி ப்ரச்னை ஆரம்பிக்கப் போகிறார். ஹிந்துமகாஸபையில் இதைத் தீர்மானமாகக் கொண்டுவந்து ஒரு கிளர்ச்சியை இந்தியா முழுதும் பரவும்படி செய்யவேண்டும்.

ஸாரம் ரெங்காச்சாரியா.

"ஹிந்து மதஸ்தர்கள் கவனிக்க வேண்டிய தர்மம்."

பிர்மஸ்ரீ ஜி. ராமச்சந்திரய்யரவர்களால் திருநெல்வேலி ஸ்ரீ விவேகஸம்வர்த்திநீ சபையில் ஆங்கிலத்தில் செய்யப்பட்டதும், பிர்மஸ்ரீ ராவ்ஸாஹேப். எல். ஏ. ரெங்கஸாமி அய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்த்து விஸ்தரிக்கப்பட்டதுமான ஹிந்துமதஸ்தர்கள் யாவரும் கவனிக்கவேண்டிய தர்மத்தைப்பற்றிய சிறந்த உபன்யாஸம்.

1-பிரகாணம்.

சீர்திருத்தக்காரர்களின் செய்கையும், பிராமணஜாதிக்கு ஏற்பட்ட வெளித்தோற்றக் குறிகளும். பிராமணர்களே!

நம்மில் அநேகர் பிறப்பினாலும் பேருக்குமாத்திரமுமே பிராமணர்களாயிருந்து வருகிறோம். நம்முடைய பிராம்மண்யமானது ஒரு மயிரிழையில் தொங்கிக்கொண்டிருக்கிறது. அப்படி யிருப்பதானது நம்முடைய ஆத்ம உன்னதிக்கு உண்மையில் உதவுவதற்குப் பதிலாய் நம்மை அதிக துர்ப்பாக்கிய நிலைமையில் வைத்துவருகிறது. நம்மைப் பார்த்து மற்றவர்கள் பயப்படுவதாயும், பொறாமைப்படுவதாயும், பகிரங்கமாய் வெறுத்துத் தூஷிப்பதாயும் உங்களில் அனேகர் சொல்லுகிறார்கள்.

ஆனால் பிராமணரல்லாதாரில் கிளர்ச்சிக்காரருடைய பிழைகளையும், குற்றங்களையும் கவனிக்கும்போது மாத்திரம் நாம் பிராமணஜாதியை சேர்ந்தவர்கள் என்று நமக்கு நினைவுவருகிறது. நமக்குள் மிதம்மீறின ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் அனேகர் இருக்கிறார்கள். அவர்கள் ஹிந்துஜனபரிபாலனமுறைவிஷயத்தில் ஏதோ அஸாதாரணமும் கோணலுமான அபிப்பிராயங்களை மனதில் வைத்துக்கொண்டு ஜாதிவேற்றுமை ஏற்பாடுகள் இருப்பது இத்தேசத்திற்கே ஒரு தீமையென்று குற்றம் கூறுகிறார்கள். மேலும் அப்படிக் குற்றம்கூறுகிறதோடுகூடவே பிராமணசமூகத்தின் ஐக்கியததைப் பலப்படுததிக் காப்பாற்றி விருத்திசெய்யப் பிரயத்தினங்கள் கையாளப்படுவது அவசியமென்பதாயும், அப்படி ஏதோ உண்மையாகப் பிரயத்தினம்செய்யத் தங்களுக்கு அக்கறையிருப்பதுபோலவும் சிபார்சு பேசுகிறார்கள். இப்படி அவர்களுடைய தாறுமாறான கொள்கைகளின் நியாயத்தைக் கண்டறிவது அசாத்தியமாயிருந்தாலும் ஒரு சங்கதிமட்டும் வியக்தமாகிறது. என்னவெனில், உலகவாழ்க்கையில் வயறுவளர்க்கும உத்யோகப் போராட்டத்தில் பிராமணர்கள் ஜயத்தோடு முந்திக்கொள்ளுகிற நிமித்தம் பிராமணர்கள்மீது பிராமணரல்லாதார் பலவித அவதூறு மொழிகின்றதைப் பிராமணர்கள் காணும்போது மனதில் சுருக்கென்று ரோசப்படுகிறார்கள் என்பதுவேயாம். சீர்திருத்த ஆவல் கொண்ட பிராமணர்களில் என்னுடைய வெகுநாள் பழக்கமுள்ள

சினேகிதர் ஒருவர் பிராமணர்களுக்குள் ஒற்றுமையே சூன்ய மென்பதாயும், ஆகையால் அப்படிப்பட்ட பிராமணசமூகத்திற்கு உபகாரமான சாதகங்களைக் கையாடுவது சாயாமலிருக்கிறதாயும், அதைக்கண்டு தான் மனவருத்தப்படுவதாயும் சொல்லிக்கொண் டது எனக்குத் தெரிந்தும்கூட அவருக்கு நான் பரிகாரம்ஒன்றும் சொல்லாமல் அவருடைய நிலைமையைக்கண்டு அனுதாபமட்டும் பட்டேன். ஏனெனில், பிராமணசமூகத்தின் வாழ்க்கைக்கு ஜீவா தாரமான பிராமண்யத்தைப் பாதுகாப்பதையே லக்ஷ்யம்செய்யாத அந்த மனுஷ்யனுக்கு நான் பரிகாரம என்ன சொல்லஇருக்கிறது. உண்மையான பிராமண்யத்தைச் சட்டைசெய்யாமல் பிராமணஜன சமூகத்தைப்பற்றிக் கவலைப்பட்டுப் பேசுவதெல்லாம் வீண் பிதற் றலேயாகும். பிராமணனாய்ப் பிறந்திருந்தபோதிலும் ஜாதி ஏற் பாட்டை நிந்திக்கிறவனும, பிராமண வாழ்க்கைக்கு அத்யாவச்ய மான கடமைகளைக்கூடச் செய்யாமல் விட்டுவிட்டிருப்பவனும், அந்தப் பிராமணசமூகத்திற்கு இறநதுபோனவனைவிடக் கேடே என்னலாம். அவன் அந்த பிராமணசமூகத்தைச் சேர்ந்தவனாய்க் காட்டிக்கொள்வதும், தேன்மொழிகளைப் பேசுவதும் மோசக்கா ரப் பாசாங்கேயாகும். அப்படிப்பட்ட வேஷதாரிகளுடைய விஷ யத்தில் எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் பிராமணர்களுடைய சமூகத்திற்கு உண்மையில் விரோதியாயிருந்துங்கூட அந்த பிரா மணர்களுடைய சமூகத்திற்கு மத்தியில் வெளிக்குமட்டும் நட மாடினாலும் தங்களுடைய ஸ்வதர்மத்தை எப்போது கைவிட்டு விட்டார்களோ, அப்போதே அவர்கள் அன்யமான பதிதர்களாய் விட்டார்களென்றும், தேகத்தில் விஷமானது உட்புகுந்து வேலை செய்வதுபோல் அவர்கள் பிராமணசமூகத்தை ரகஸியமாயிருந்து கொண்டு அழிப்பவர்களென்றும நீங்கள் எண்ணுங்கள். அவர்க ளுடைய பதிதத்தன்மையையும், அவர்கள் லௌகிகத்தில் என்ன உன்னதப் பதவியிலிருந்தாலும் பிராமணசமூகம் நீடித்துச் சாச் வதமாய் வாழ்வதற்கு அவர்கள் எள்ளளவும் உதவமாட்டார்க

ளென்பதையும் நீங்கள் நிச்சயமாய் நம்புங்கள். அவர்கள் தேச நன்மைக்கு உழைப்பதாயும், சமூக அபிவிருத்திக்கு உழைப்பதாயும் சொல்லிக்கொள்வார்களே ஒழிய, உட்புகுந்து பார்த்தால் அவர்கள் இந்தக் கலியுக அதர்மத்திற்குக் கருவிகளாய்நின்று கலிபுருஷனுடைய சூத்திரக்கயிறினால் ஆடும் ஒன்றுமறியாப் பொம்மைகளென்பது வெளிப்படும்.

நமக்கு ஆபத்துவிஷயத்தில் இவர்களுக்கு அடுத்தபடி யாரென்றால் தங்களைப் பிராமணர்களென்று சொல்லிக்கொண்டு உயர்ந்த ஆரியமதத்தின் நம்பிக்கையிலிருந்து உள்ளூர நழுவியிருப்பதற்கு ஏற்கத் தங்களுடைய வெளித்தோற்றத்தையும் மாற்றிக்கொண்டு திரிகிறவர்களேயாகும். இவர்களின் சங்கியை நாளாவட்டத்தில் அதிகமாகிக்கொண்டே வருகிறது, வைதீக தர்மத்தின் ஆரியமதத்தைத் தொடர்ச்சியாய்க் கைப்பற்றிவரும் சமூகத்தினர்களை வெகுகாலத்திற்கு முன் ஐரோப்பா முதலிய அன்னியதேசங்களுக்குக் குடிப்போய் பலவித காரணங்களால் ஷை ஆரிய மதத்தைவிட்டு நழுவிப்போன மற்ற சமூகத்தினர்களிலிருந்து பார்த்த மாத்திரத்தில் பகுத்தறியும்படி சில வெளிப்படையான சின்னங்களும் அறிகுறிகளும் தெரிந்து ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது ஈச்வரனுடைய அமைப்பேயாகும். ஹிந்துவல்லாத அன்யர்களுக்கும் ஆரிய ஹிந்துவிற்கும் உள்ள வித்தியாசத்தைச் சிகையினாலும் புண்டரத்தினாலும் முதல் வர்ணத்தைச் சேர்ந்த ஹிந்து த்விஜர்களுக்கும் நாலாம் வர்ணத்தினருக்கும் உள்ள வித்தியாசத்தை எக்ஞோபவீதத்தினாலும் பார்த்தமாத்திரத்தில் தெரிந்துகொள்ளலாம். ஹிந்துசமூகத்தைச் சேர்ந்தவனென்றும், பலான சம்பிரதாயத்தைச் சேர்ந்தவனென்றும், பலான ஆரிய பக்திமார்க்கத்தைச் சேர்ந்தவனென்றும் உலகத்தோருக்குப் பார்த்ததும் காண்பிவிக்கும் சிகை புண்டரம் முதலிய ஷை அடையாள அறிகுறிகளைத் தன் மதத்தை இழிவாக நினைத்து தற்கணிசத்தையும் கைவிட்டவனாயிருந்தாலொழிய ஒரு ஹிந்துவும் அனுசரியாமலிருக்கமாட்டான்,

கர்ம உபாஸனா மார்க்கங்களைப்பற்றிச் சொல்லும் மதசம்பந்தமான விதிகளடங்கின ஒரு சாஸ்திரத்திலாவது ஷிகைபுண்டர யஜ்ஞோபவீதக் குறிகளைப்பற்றிச் சொல்லாமலிருக்கவில்லை, நீங்கள் மதசம்பந்தமான கிரியைகளைச் செய்யும்போது அவைகளை உதாசீனம்செய்யச் சரிப்படவில்லை. நீங்கள் தர்மக்கிரியைகளின் பலனில் நம்பிக்கைவைப்பதானது இன்னின்ன பலன்களுக்கு இன்னின்ன கிரியைகள் செய்யவேண்டுமென்று விதித்திருக்கும் சாஸ்திரத்தில் நீங்கள்வைத்திருக்கும் நம்பிக்கையினாலேயே அல்லவா? ஆகையினால் இன்னின்ன கிரியைகளை இன்னின்னவிதமாயும் இன்னின்ன வழியாயுமிருந்துகொண்டு செய்யவேண்டுமென்று விதித்திருக்கிற சாஸ்திரப்பிரகாரம் நீங்கள் நடவாவிடில் உத்தேசித்த பலன்களை நீங்கள் எப்படி அடையச் சாயும். கர்மா, உபாஸனை இவைகளின் தர்மக்கிரியைகள் இரண்டுவிதமான பலன்களை உத்தேசித்தவையாகும். அவைகள் நம்முடைய காயத்தையும் மனப்பாங்கையும் ஒட்டின சுபாவங்களுக்குச் சரியான பயிற்சியைக் கொடுப்பதுமன்னியில், கர்மா, உபாஸனை இவைகளுக்குப் பாத்தியதையை வகித்த மறுலோக கர்த்தாக்களாகிய தேவர்களுக்கும் திருப்திப்படுத்துகின்றனவுமாகும். தேவர்களுக்குத்திருப்தியானது போகபாக்கிய சாதகமுமன்னியில் கர்த்தா, உபாஸகர் இவர்களின் நிலைமைக்குத் தக்கபடி சித்தசுத்தியையும் உண்டாக்குகின்றது.

தேவதைகள் இந்திரியங்களுக்கும் மனதிற்கும் அபிமானி தேவதைகளாயிருக்கிறபடியால் சித்தசுத்தி வருவதற்கும் அவர்களைத் திருப்திப்படுத்துவது அவச்யமாயிருக்கிறது. நம்மைவிட எத்தனையோமடங்கு தேவர்கள் அறிவிலும் சக்தியிலும் பெரியவர்களானாலும், அவர்கள்கூடப் பூர்ணமாகாதவர்களும் பந்தத்துக்குள்ளானவர்களுமேயாகும். ஆகையால் எவ்விதத்தில் அவர்களுக்குத்திருப்திசெய்யும்படி தெரிந்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ, அவ்விதத்திலேயே அவர்களை திருப்திசெய்துதீரவேண்டும். இதுவே இப்படியிருக்க, தேவர்களுக்குத் தாழ்ந்தபடியி

னுள்ள பிரேதப் பிதுர்தேவதைகளுக்குக் கட்டாயம் சரியானபடி திருப்தியுண்டாக்குவது அதிக முக்கியமாகும். அது எந்தவிதத்தால் செய்யப்படவேண்டுமென்பது தெளிவாய் நமக்கு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. இதுவிஷயமான ஆகுதிகளும், தியானமும் சரியாய்ச் செய்யப்பட்டாலொழிய அவைகள் பயன் படமாட்டா. இதற்குத் திருஷ்டாந்தம்:— கோர்ட்டில் வக்கீல் ஆஜராவதின் கருத்தானது தன்னுடைய கக்ஷிக்காரனுடைய கக்ஷியின் உண்மையையும் நியாயத்தையும் தகுந்தபடி ஜட்ஜியின் மனதில் பதியும்படி எடுத்து விளக்கிக்காட்டுவதற்கு மட்டுமேயாகும். அப்படியிருந்தாலும் வக்கீல் எங்ஙெந்தவிதமா யிருந்து நடந்துகொள்ளவேண்டுமோ அந்தப்படி நடந்துகொண்டுதானே கேஸை எடுத்துக்காட்டி வாதிக்கவேண்டியிருக்கிறது. அதாவது அந்த வக்கீலானவர் சரியாய் லாங்கோட்டு, தலைக்குட்டை, கௌன்தரித்துக் கோர்ட்டார்முன் நின்றுகொண்டு சமயத்திற்கும் காரியத்திற்கும் ஏற்றவசனங்களாய் கேஸை எடுத்துரைக்கவேண்டியிருக்கிறது.

தான் பேசவேண்டிய வாதத்திற்கு மேல்கண்ட வேஷங்கள் சம்பந்தமில்லாவிட்டாலும், அந்த ஏற்பாடுகளும் இன்னும எத்தனையோ நூற்றுக்கணக்கான சில்லரைக் கோர்ட்டு பத்ததிகளும் அனுசரிக்கப்படவேண்டித்தானே யிருக்கிறது. இந்த பூலோகத்திலேயே அப்படியிருக்க, நமக்கிப்போது பிரத்யக்ஷமில்லாத வேறு லோகங்களில் அதிகாரம் வகித்தவர்களுக்கு மரியாதை, வந்தன திருப்திகள் செய்யும் விஷயத்தில் கர்ம உபாஸனுக்கிரமங்களில் கண்டிப்பாய் விதிக்கப்பட்ட பத்ததிகள் அனுசரிக்கப்படவேண்டியது இன்னும் அதிக முக்கியமல்லவா.

இந்த நியாயத்தை ஒப்புக்கொண்டு சாஸ்திரங்களின்விதிகளை உள் நுழைந்து பார்த்தால் பிதுர்களுக்கோ அல்லது மற்ற தேவர்களுக்கோ அப்போதைக்கப்போதோ அல்லது பிரதிதினமோ செய்ய வேண்டியிருக்கிற கிரியை விஷயத்தில் கர்த்தாவும் உபாஸ

கரும் வெளித்தோற்றத்தில் அனுசரிக்க வேண்டிய கட்டாய விதி களில் மேல்கண்ட சிகாபுண்ட்ர யக்ஞோபவீதக் குறிகள் முக்கிய மானவைகளாய் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன என்பது தெரியவரும்.

(தொடரும்)

ஸ்திரீ தர்மம்.—ந

பிறப்பு முன்வினைப் பயனாகும். பிறந்தபின் வாழவேண்டும். வாழ்க்கையின்கால அளவு இறக்கும் வரையில்தான். வாழ்கையின் போக்கு ஜாதகத்தில் காணப்படுகிறது. ஜாதகம் விதியின் நோக்கைக் குறிக்கும். இவ்விதிவழியே நடப்பவன் இவ் வாழ்கை இறுதி அடைந்ததும் மறுபிறவிகளையும் வாழ்க்கைகளை யும்பெறுவான். அதாவது இந்த ஒரு ஜாதகப்படி நடந்தவன் பின் பல ஜாதகங்களுக்கு இடங்கொடுத்தவனாகிறான். ஆதலால் இவ்வாழ்கையில் புருஷப்ரயத்தனத்தால் தன் ஜாதகத்தைமாற்றிக் கொண்டவன் பின் தன் பிறவிகளைக்குறுக்கிக்கொள்வதோடு, சுகப் பிறவிகளையும் பெறுவான். இப்பிறவி வாழ்க்கையில் எண்ணங் களையும் செய்கைகளையும் தீய [பாப] வழிகளில் போக்குவோன், பின்னால் இழிவான கெட்டபிறவிகளைப் பெறுவான் என்பதை மறுப்பாரில்லை. நல்வழிகளில் செலுத்துவோன் சிறந்த பிறவி களைப் பெறுவான். இறுதியில் முக்தியும் பெறுவான்.

பாரதப்போர் முகத்தில் சோகமடைந்த அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் யோகமுறையை உபதேசிக்கையில் யோகம் ஆரம்பித்தவன் தவறி நழுவிவிட்டால் அவன் கதிஎன்னஎன்று அர்ச்சுனன் கேட்டதற்கு ''அவன் மறுப்பிறவியில் ஸ்ரீமான்கள் குலத்தில் பிறந்து பின்னும் யோகத்தைப் பூர்த்திசெய்வான்.'' என்றும்'' நல்லது செய்ய ஆரம்பித்தவன் ஒரு நாளும் தாழ்மை

அடையமாட்டான்" என்றும் கூறியுள்ளார். ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்ரீ பகவத்கீதையில்.

எவருக்கும் தன் வாழ்க்கை நடத்துகையில் குறிக்கோள் ஒன்று வேண்டும். வாழ்க்கையில் குறிக்கோள் (குறி-லக்ஷ்யம்) உயர்பிறவி அல்லது முக்தி. உயர் பிறவி முக்தி நாடுவோன் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும் என்று, வேதசாஸ்திரங்களில் அநுபவித்த பரமபுருஷர்கள் வகுத்து வரைந்திருக்கின்றனர். இக்காரியங்களைச் செய்வதை நால்வகை புருஷார்த்தங்களுள் முதலாகிய தர்மம் எனப்படும். அர்த்த காம பூர்த்திக்கு வேண்டிய கார்யங்களோடு தர்மகார்யங்கள் செய்ய வேண்டியது தான் வாழ்க்கையில் முக்கியநோக்கமாக நிற்கவேண்டும். தர்மகார்யங்கள் செய்வதற்கு புருஷர்களே அதிகாரிகள். கார்யங்களைக் குறிப்பிடும் சாஸ்திரங்களே அவ்விதம் கூறுகின்றன. புருஷர்கள் அக்காரியங்களைச்செய்யும் பொழுது உதவிபுரிய வேண்டியது பத்னிகளின் கடமை. ஒரு காரியம்செய்வதற்கு வேண்டிய இடம் பொருள்கள் முதலியவைகள் முன்னால் ஸித்தமாக்கப்பட வேண்டியவைகள். முன்னால் தயாரிக்க வேண்டிய வேலை ஸ்திரீயினுடையதாதலால் ஸ்திரீ முன்னால் துயிலெழவேண்டும்.

பிறகு தன்னை சுத்தம் செய்துகொண்டு வீடு வாயில் முற்றங்களையும் சுத்தி செய்துவிட்டு கணவனும் தானும்செய்ய வேண்டிய ஔபாஸனம், பஞ்சமஹா யக்ஞங்கள், (இவைகள் எல்லாம் ஸ்திரீகளுக்கு அர்ததம் விளங்காத விஷயங்கள். அநேக புருஷர்களுக்கே புதிதாயிருக்க இவர்களைப்பற்றி என்ன !) இவைகள் செய்வதற்கு வேண்டிய பாத்திரங்களை சுத்தி செய்து வைக்க வேண்டும்.

இங்கே கவனத்துக்கு உரிய விஷயம் ஒன்று உண்டு. யக்ஞபாத்ரங்களை உஷ்ணஜலத்தினால் சுத்தி செய் என்றார். குளிர்ந்த ஜலத்தினால் சுத்தி செய்து பார்த்திருக்கிறோம். உஷ்ணஜலத்தினால் செய் என்று சொன்னது யக்ஞபாத்திரங்களில் நெய் ஸம்

பந்தத்திஞல் தைலப்பசை ஒட்டியிருப்பதை நீக்க என்று தெரிகி றது (स्निग्धानि?) இனி பாத்திர சுத்தி செய்கையில் ஸமய உசித மாய் உஷ்ணஜலம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

प्रोक्षणीयानि तान्येव यथास्थानं प्रकल्पयेत् ।
शोधयित्वा तु पात्राणि पूरयित्वा तु धारयेत् ॥

சுத்திசெய்தபாத்திரங்களை அவை அவைகள் இருக்க வேண் டிய இடங்களில் வைக்கவேண்டும். இதர பாத்ரங்களையும் சுத்தி செய்து ஜலத்திஞல் நிரப்பி வைக்கவேண்டும்.

பாத்ரங்களை எடுத்த இடத்தில் வைப்பது சிறந்த பழக்கமா கும். கேட்ட பாத்திரங்களைக் காணமுடியாமல் மூலைக்கு மூலை தேடித் தவிக்கும் ஸ்திரீகள் உள்ள குடும்பங்கள்பலகோடி உண்டு. அத்வைதிகளுக்குள் ஒரு பிரிவாகிய வாததிம ஸ்மார்த்தர்கள் வீடு களில் முறம சல்லடை முதற்கொண்டு எல்லாப்பாத்ரபதார்த்தங்க ளும் பிரத்யேகமான இடங்களில் தவிரமாற்று இடங்களில் ஒரு ஸமயமும் இருப்பிவைக்கப்படுவதில்லை. முக்கியமாய் இந்தப்பழக் கம் அவசியம் பழக வேண்டியதுகளுள் ஒன்ருகும்.

ஸாரம். ரேங்காச்சாரியார்.

தர்மகல்பதரு.

(ஓர்ஆராய்ச்சி)

இத்தலைப்பில் ஒரு நீதிநூல் நமது "ஆர்யதர்மம்" இதழ் களில்வெளிவருகின்றது. அதனை அடியேன்மகிழ்ச்சியுடன்படித்து வருகின்றேன், அது தண்டமிழ் முதல் நீதிநூலும், 'சொல்லுக் குறுதி' என்ற சிறப்புப்பெயர் பெற்றதுமான "நாலடியார்" என் பதன் மொழிபெயர்ப்பு என்பது கருதி, இத்தகைய முயற்சி கொண்டாடத்தக்கதே. எனினும், அது முதல் நாலோடுப்பெரி தும் ஒத்து வருவது விரும்பத்தக்கது; குறித்த நோக்கத்தைப்

பூர்த்தி செய்வதுமாம். இங்ஙனமாக இச்சொல்லப்பட்ட தலைப்பில், சிற்சில மாறுபாடுகளும், கருத்து வேறுபாடுகளும்,பொருட்டிரவுகளும் காணப்படுகின்றன. அடியேனது ஆசிரியர் அடிக்கடி வற்புறுத்தியதுபோல் "எவ்வளவு விரைவில் முடித்தோம் என்பதிலும், எவ்வளவு நன்றாய் முடித்தோம் என்பதே மேல்" என்ற தத்துவத்தைக் கடைப்பிடித்து அந்நூல் முதல் நூலொடு முரணாது வெளிவருவது நலமாம். சிறந்த தண்டமிழ்த் தொண்டுமாம்.

தண்டமிழ்த்தொண்டன்.

சில குறிப்புகள்.

"விசிஷ்டாத்வைத க்ரந்த ஸஹாய நிதி" என்ற பெயருடன் கும்பகோணத்தில் ஒரு 'நிதி' ஸ்தாபிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதன் உத்தேசம் "விசிஷ்டாத்வைத மதக்கிரந்தங்களைதேசபாஷையில் மொழிபெயர்த்து சகாயவிலைக்கு விற்கச்செய்வது தான் என்பதை இதன் பெயரேவிளக்கும். இதுபோல் ஸ்ரீமத் சங்கரகுருசரணாளின் திவ்யக்ரந்தங்களை தேசபாஷைகளில் மொழிபெயர்த்துப் பிரசாரஞ்செய்வதற்கான பொருள் உதவி செய்யும் ஸங்கமும் நிதியும் ஏற்பட்டால் எவ்வளவோ மஹோபகாரமுமாகும். கண்டவர் கண்டவாறு அத்வைத நூல்களின் அபிப்பிராயமுணராது மொழிபெயர்த்து சாஸ்திரங்களின் கருத்தைத் தவறாக வெளியிடும தொல்லைகள் இவ்விதமுயற்சியினுல் தான் நீங்கும். பொருளாதார முறையில் கவனித்தால் கூட நன்றாகப் பயன்தரும். ஆனுல், தனித்தபொருளாதாயத்தைப் பார்க்கினும் ஸர்வஜனங்களும் அத்வைத ஞானலாபம் பெறுதலே சிறந்தலாபமாகும். சுபஸம்ஸ்காரம் வலுப்பட இது ஒரு கருவியென்னலாம்.

ஆங்கிலம் படித்து 'சதுர்புஜம்' (பட்டபரீக்ஷை ஸன்னது) வாங்கியவர்களாயினும், "ப்ராஹ்மணர்களானல் உத்தியோகங்கிடைப்பது அரிது" என்ற ரஹஸ்யம் எல்லோருக்கும்தெரிந்ததே. B. A. படிக்கும் வரை செலவிடப்பட்ட பல்லாயிரக்கணக்கான ரூபாய்களுக்கும் சமயங்களுக்கும் வட்டி கூடக் கிடைக்காமல் மனம் வருந்தும் பிராஹ்மண யுவாக்களுக்கு ஜீவனோபாயத்திற்கு ஒரு வழி செய்யவேண்டும் என்று ஸ்ரீமான்ராஜி நீதிபதிசேஷாத்திரி அய்யரவர்கள் ஒரு விண்ணப்பம் வெளியிட்டார்கள். அதை கவனித்த சில பிராஹ்மணோத்தமர்கள் சிற்சில இடங்களில் ப்ராஹ்மண வாலிபர்களுக்கு வேலை கொடுப்பதாகவும் வேறு சில உதவி செய்வதாகவும் வாக்களித்தார்கள். அதனைத் தொடர்ந்து முயற்சித்தால் பயன் கிடைக்குமென்று தெரிகின்றது. அது போலவே ஸம்ஸ்கிருதம் படித்தவித்வான்களுக்கும் "ஸம்ஸ்கிருதத்திலுள்ள அபூர்வக்ரந்தங்களை மொழிபெயர்த்து" உதவும் வேலை கொடுத்து ஆதரிப்பதென்று ஒருஏற்பாடு நடைபெற்றால், ஸம்ஸ்கிருதபாஷை கற்றாலும் "இருவகைப்பிரயோஜனமும்கைமேலிருக்கின்றது" என்ற அறிவு ஜனங்களுக்கு ஏற்படும். இந்த மஹத்தான வேலையை எவ்வாறு நிறைவேற்றலாம் என்பதை அடுத்த குறிப்பில் கவனிப்போம்.

ஜாநகீஜாநி.

வாழ்க வந்தனர் வர்னவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.